DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.11

Name : **திரு.ஷாஜகான்** Caste:
Father's Name :**திரு.** Calling :
Village: Religion :
Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 20.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை**

1. நான் கடந்த ஜூலை 2022 வருடம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 10.11.2019-ம் தேதியன்று போடி நகர காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது போடி நகர் காவல் நிலைய குற்ற எண் 959/2019, சட்டப்பிரிவு 174 crpc வழக்கு கோப்பை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். வழக்கின் புகார்தாரர் ஜெய்லானி, திருமதி.உபைதா பாசித் ரகுமான், திருமதி.பசுபதி, திருமதி.ராபியா பீவி, சாகுல் ஹமீது, அப்பாஸ் ஆகியோர்களை விசாரணை செய்தேன். சம்பவ இடத்திற்கு அன்றைய தினமே 11:30 மணிக்கு சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் சாகுல் ஹமீது மற்றும் அப்பாஸிடம் கையொப்பம் பெற்றேன்.

2. பின்னர் சம்பவயிடத்தில் பிரேத விசாரணை செய்து 5 நபர்கள் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை முடித்து காவலர் 2120 மூலமாக தேனி அரசு மருத்துவமனைக்கு இறந்தவரது இறப்பு குறித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற பிரேதத்தினை அனுப்பி வைத்தேன். 20.11.2019 -ம் தேதியன்று மேற்படி இறந்து போனவர் உடல் உறுப்புகளை பகுப்பாய்விற்கு முதல் நிலை காவலர் குமார் மூலமாக அனுப்பி வைத்தேன். அதன் பிறகு உள்ளூர் தேர்தல் நடைபெற்றதாலும் தொடர்ந்து கொரோனா ஏற்பட்டதாலும் இவ் வழக்கில் முன்னேற்றம் இல்லாத நிலையில் நான் 2021 தேர்தலை முன்னிட்டு

பொருளாதார குற்றப்பிரிவு திண்டுக்கல்லுக்கு பணி மாற்றம் செய்யப்பட்டேன், வழக்கு கோப்பினை திரு. சரவணன் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.15, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.16.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

1. நான் இறந்தவரை புகைப்படம் எடுக்கவில்லை. பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் எடுத்த புகைப்படத்தை சாட்சியிடம் காட்டி அந்த புகைப்படத்தில் இருப்பது தான் இறந்து போன நபர் என சாட்சி தெரிவிக்கிறார் ஒரு வருடமாக அவர் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையில் இருந்ததாக தெரிவிக்கிறார்.

2. இறந்தவரது மனைவியான 1–ம் எதிரி அந்த சமயத்தில் அங்கு இல்லவே இல்லை, நான் அந்த காவல் நிலையத்தில் ஆய்வாளராக இருந்தவரை 1–ம் எதிரியை நான் பார்க்கவில்லை. எனவே இறந்தவரது பிரேதமானது பிரேத பரிசோதனை முடித்த பின்னர் புகார்தாரரான ஜெய்லானி வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின்போது 1 வருடம் 2 மாதங்கள் நான் அதே காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தேன். நான் பதிவு செய்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதித்துறை நடுவரிடம் அனுப்பினோ இல்லையா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. ஒரு வருடமாக என்ன நோயால் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கையாக இருந்தார் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் காசநோய் என்று சொன்னார்கள். இறக்கும் வரை அவர் காச நோய்க்கான மருந்து மாத்திரைகளை உட்கொண்டு வந்தார் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். இறந்தவர் பிரேதத்தை முதல் முதலில் பார்த்தவர், இறந்தவரது மகன் பாசித் ரகுமான் என நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கை காலம் எண். 9–ல் அபிபுல்லாவின் மனைவி அனீஸ் பாத்திமா வெளிநபர்களுடன் பேசி வந்தார் என்றும், அதனால் அவரது நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டு இருவருக்கும் சண்டை ஏற்பட்டது என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. விஷம் சம்பந்தமாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, கடைசி பாராவில் பஞ்சாயத்தார் சாட்சிகளின் வாயிலாக விஷம் அருந்தி இருக்கலாம் என சந்தேகம் எழுவதாக பஞ்சாயத்து சாட்சிகள் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறு பிரேத விசாரணை செய்த பிறகு என்ன மாதிரியான விஷயம் அது எங்கிருந்து யாரால் வாங்கப்பட்டது என்பது தொடர்பான விசாரணை எதுவும் நான் மேற்கொண்டேனா என்றால் அது பற்றி நான் மேற்கொண்டேன் ஆனால் குறிப்பிட்டு தகவல் கிடைக்கவில்லை. எனது விசாரணையில் எந்த சாட்சியும் குறிப்பிட்டு அது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் அது சம்பந்தப்பட்ட ஆதாரங்கள் எதையும் நான் கைபற்றவில்லை என்றால் சரிதான்.. இந்த வழக்கில் நான் விசாரணை செய்த சாட்சிகள் அனைவரும் இறந்த நபருக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் வரைபடம் வரையவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரணை செய்த சாட்சிகள் யாரும் சொன்ன இடத்தில் வைத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.20 15:55:18 +05'30'

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.